# பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி

## கலெக்டர் வழங்கினார்

ஊட்டி, ஜூன் 14: கோத்தகிரி வட்டத்திற்குட்பட்ட கொணவக்கரை கிராமத்தில் செம்மனாரை உண்டு உறைப்பள்ளியில் மனுநீதி நாள் முகாம் நடந்தது.

கோத்தகிரி வட்டத்திற்குட்பட்ட கொணவக்கரை கிராமம் அருகே செம்மனாரை உண்டு உறைவிடப் பள்ளியில் மனு நீதிநாள் முகாம் நடந்தது.

கொணவக்கரை ஊராட்சி மன்ற தலைவர் குப்புசாமி வரவேற்றார்.

முகாமிற்கு மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் தலைமை தாங்கி 7 பயனாளிகளுக்கு முதியோர் உதவித்தொகையும், 4 பயனாளிகளுக்கு விதவை உதவித்தொகையும் என மொத்தம் 11 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் சுகாதார பணிகள் துணை இயக்குநர் பானுமதி, தோட்டக்கலை இணை இயக்குநர் மணி, கலால் உதவி ஆணையர் முகமது பாதுஷா, பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் மனோகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் ஜெயராஜ், தாட்கோ மேலாளர் போஜன், கோத்தகிரி வட்டாட்சியர் இரியன் மற்றும் அரசுத்துறை அலுவலர்கள், ஊர் பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கீழ் கோத்தகிரி வருவாய் ஆய்வாளர் பொன்னரசு நன்றி கூறினார்.





தோடர் இன பெண்கள் மேற்கொள்ளும் எம்பிராய்டரி (பூ வேலைபாடு)க்கு புவியியல் குறியீடுக்கான சான்றிதழை மாவட்ட கலெக்டர் அர்ச்சனா பட்நாயக் வெளியிட்டார்.இதில் பங்கேற்ற பெண்கள்